[1995 நவம்பர் 10

அறிக்கை

வள்ளலார் மாவட்டம் சிதம்பரம் வட்டத்தில் இந்த ஆண்டு சுமார் *52,000* ஏக்கரில் ஆடுதுறை *38*, ஆடுதுறை *39*, சி.ஆர். *1009* மற்றும் வெள்ளைபொன்னி நெல் ரகங்கள் சம்பா பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் வெள்ளை பொன்னி நெல் சுமார் *1250* ஏக்கரில் இந்த வட்டாரத்தில் நடவு செய்யப்பட்டுள்ளது. இது தவிர மேலும் *1250* ஏக்கர் பரப்பில் பின் சம்பா பட்டத்தில் நடவு செய்ய நாற்றங்கால் தயாராக உள்ளது. நாற்றங்காலிலும், நடவு செய்யப்பட்ட நெற்பயிரிலும், எந்தவித நோய் தாக்குதலும் இன்றி பயிர் நல்ல நிலையில் உள்ளது. இந்த மாவட்டத்தில் மஞ்சள் நோய் எனப்படும் துங்ரோ வைரஸ் (TUNGRO VIRUS) நோய் தாக்குதலுக்கான எந்த அறிகுறியும் இதுவரையில் காணப்படவில்லை. வெள்ளை பொன்னி ரகம் நெல் ஓரளவு துங்ரோ வைரஸ் நோயை தாங்கி வளரக் கூடியது. தவிர இம்மாவட்டத்தில் துங்ரோ வைரஸ் நோய் தடுப்புக்காக ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு தொழில் நுட்பங்கள் வயல் வெளிப்பள்ளிகள் மூலம் (FFS) செயல்படுத்தப்பட்டுள்ளது. துங்ரோ வைரஸ் நோய்க்கு இலக்காகும் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்., தென்னாற்காடு வள்ளலார், வடாற்காடு அம்பேத்கார், விழுப்புரம் ராமசாமி படையாச்சியார் மற்றும் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்களில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை (I) கடைபிடித்து இந்த நோய் வராமல் தடுக்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது.

• தவிர இத்துறை அலுவலர்களுடன் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தை சார்ந்த பயிர்பாதுகாப்பு நிபுணர் ஒருவர் இம்மாவட்டத்திற்கு மேலும் தேவைப்படும் பயிர்பாதுகாப்பு நடவடிக்கையை பரிந்துரைக்கு அனுப்பப்பட்டுள்ளார். ஆகவே, இந்த நோய் தாக்குதலுக்கான அபாயம் எதுவும் இல்லை.

இணைப்பு-3

(366-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

தமிழ்நாடு வேளாண் கொள்கை

தமிழ்நாட்டில் வேளாண் வளர்ச்சியை மையமாகக் கொண்டே, சமூக மற்றும் பொருளாதார மேம்பாடு அமைந்திருக்கின்றது. இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி வேளாண்மை மாநில அரசின் அதிகாரப் பட்டியலில் உள்ளது. எனவேதான், அனைத்து வேளாண் தட்ப வெப்ப மண்டலங்களிலும் சீரான வேளாண் வளர்ச்சியை நிலை நிறுத்திக் கொள்வதற்கு ஏற்ற வகையில் மாநில அரசு உயரிய கவனத்தையும், தலையாய முன்னுரிமையையும் வேளாண்மைக்கு அளித்து வருகிறது.

கடந்த ஆண்டுகளில் வேளாண் உற்பத்தி, குறிப்பாக உணவு தானிய உற்பத்தி பன்மடங்கு பெருகி உள்ளது என்றாலும், இந்த வளர்ச்சி அனைத்துப் பகுதிகளிலும், அனைத்துப் பயிர் வகைகளிலும், எதிர்பார்த்த அளவில் அமைந்திடவில்லை. சில பயிர்களின் வளர்ச்சி விகிதம் மற்ற பிற பயிர்களைக் காட்டிலும் அதிகமாகவே இருந்திருக்கின்றது. மானாவாரிப் பகுதிகளைவிட பாசனப் பகுதிகளில் வேகமான வளர்ச்சி காணப்படுகிறது. வேளாண் பயிர்களின் வளர்ச்சியும், பெருக்கமும் தோட்டக்கலை பயிர்களைவிட மிகுதியானது. தமிழ்நாட்டில் வேளாண் நிலங்களின்மீதான தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. நிலத்தின் நேரடிப்பாசனப் பயன்பாடு, உச்ச நிலையை அடைந்துவிட்டது. அதேநேரத்தில் நிலத்தடி நீர் ஆதாரமும் வெகுவாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. தரிசு நிலம் மற்றும் பயிர் சாகுபடி இல்லாத நிலங்களின் பரப்பளவு அதிகரித்து வருவது கவலை தருவதாக உள்ளது. இன்றைய நிலையில் தமிழ்நாடு வேளாண்மை, பல்வேறு வகையான பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்நோக்கியுள்ளது. இப்பிரச்சினைகளை முழுமையாகப் பகுத்து ஆராய்ந்து, கருத்தொருமித்த செயலாக்கத் திட்டத்தினை உருவாக்குவதும், அதற்கான வேளாண் வளர்ச்சித் திட்டங்களை சீரமைக்க வேண்டியதும் அவசியம். இந்த நிலையில், எல்லா முனைகளிலும் பொருளாதார மேம்பாட்டையும், விரைவான வேளாண் வளர்ச்சியையும் உருவாக்குவது தமிழ்நாடு வேளாண் கொள்கையின் நோக்கங்கள் ஆகும். இந்த நோக்கங்கள் ஈடேற, மானாவாரி வேளாண்மை, தரிசு நில மேம்பாடு, மண் மற்றும் நீர் மேலாண்மை, தோட்டக்கலைப் பயிர் வளர்ச்சி, நுண்நீர்ப்பாசனம், வேளாண் விளைபொருள் அங்காடி வளர்ச்சி, வேளாண்மையில்

தொய்வற்ற தொடர்ச்சியான முன்னேற்றம், எளிதில் பின்பற்றத் தக்க வேளாண் ஆராய்ச்சி, பண்ணை இயந்திரமயமாக்குதல், வேளாண் கடன் வசதியை உயர்த்துதல் ஆகியவை ஊக்குவிக்கப்படும். வேளாண்மையோடு அதனைச் சார்ந்த இதர தொழில்களான கால்நடை அபிவிருத்தி, மீன்வளர்ப்பு, பட்டுப்பூச்சி வளர்ப்பு மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் வளர்ச்சி ஆகியவற்றை ஒருங்கிணைத்து, அகன்ற அடிப்படையோடு கூடிய வேளாண் விரிவாக்கத்தின் மூலம், பலநோக்கு பண்ணை முறையை அமைப்பதுவும் கொள்கையின் நோக்கம் ஆகும். உள் அமைப்பு வசதிகள், அறுவடைக்குப்பின் நேர்த்தித் தொழில்நுட்பம், உணவு பதனிடுதல், ஆராய்ச்சி மற்றும் வேளாண் தொழில்களின் வளர்ச்சியை மையமாகக் கொண்டு, அவற்றை விரைவுபடுத்தும் பொது முதலீட்டிற்கு தமிழ்நாடு வேளாண் கொள்கை வழி வகுத்துத்தரும். விவசாயிகள் மற்றும் விவசாயச் செயல்பாடுகளுக்குத் தேவையான உரிய அனைத்து உதவிகளையும் அரசு அளித்து ஊக்குவிக்கும். இதன்வழி வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களுக்குத் திறமையானவர்களையும், படித்து வேலையற்றவர்களையும் ஈர்ப்பதால், கிராமப் புறப்பகுதிகளின் முழுமையான வளர்ச்சிக்கும், உயரிய பொருளாதார நல்வாழ்விற்கும் இக்கொள்கை வழி வகுத்திடும்.

தமிழ்நாடு வேளாண் கொள்கையின் தலையாய நோக்கங்கள் பின்வருமாறு:

* வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப தேவையான அரிசி, சிறுதானியங்கள், மற்றும் பயறு வகைகளின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதன் மூலம் உணவுத்தானியத் தேவையில் தன்னிறைவை அடைதல்.

* வேளாண் வளர்ச்சிக்கு, இதுவரை பயன்படுத்தப்படாத வளம் செறிந்த பகுதிகளைக் கண்டறிந்து, இப்பகுதிகளில் முதலீடு வசதிகளை ஏற்படுத்தி, இருந்து வரும் குறைபாடுகளைக் களைந்து சரி செய்தல்.

* வளம் குன்றிய மற்றும் மானாவாரிப் பகுதிகளை மேம்படுத்திச் சீரான சூழலை உருவாக்குதல், மானாவாரி தோட்டக்கலை, புன்செய் வேளாண் காடுகள் போன்றவற்றை செயல்படுத்துவதன் மூலம் பசுமையை உருவாக்கி அதன் மூலம் விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் கிடைக்க வகை செய்தல்.

1995 நவம்பர் 10]

* வேளாண்மையில் தொடர்ச்சியான வளர்ச்சி ஏற்பட, நீர்ப்பிடிப்புப்பகுதி மேம்பாட்டின் மூலம் நீர்வள ஆதார மேலாண்மையை உருவாக்கி, குறைந்து வரும் நீர்வள நிலைகளைச் சரி செயதல்.

* உயர்ந்து கொண்டே வரும் மக்கள் தொகையின் தாக்கம், அதனால் ஏற்படும் நில கட்டமைப்பு முறிவுகள் ஆகியவைகளினால் உரிய உயரிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கி, அதன் மூலம் விவசாயிகளின் வருவாயை அதிகரித்தல்.

* தோட்டக்கலை மற்றும் இதர வேளாண் சார்புத் தொழில்களை ஊக்குவிப்பதன் மூலம் வேளாண்மையை வணிகமயமாக்குதல்.

* தற்போது நிலவிவரும் விற்பனை மற்றும் விளைபொருள்கள் சேமிப்பில் உள்ள தேக்கநிலையால் வேளாண் விளை பொருட்களுக்கு ஓரளவு மதிப்பே கிடைக்கிறது. எனவே வேளாண் தொழில்கள் வளர்ச்சி மற்றும் வேளாண் விளைபொருட்கள் பதனிடுதல் மேம்பாடு ஆகியவை உருவாக்கப்படும்.

* விவசாயிகளுக்கு வழங்கப்படும் குறுகிய, மத்திய மற்றும் நீண்ட காலக்கடன் வசதிகளைச் சீரமைத்தல்.

* பரந்த வேளாண்மை விரிவாக்கத்திற்கு உரிய தொழில் நுட்ப ஆதார அடிப்படையை உருவாக்குதல்.

* வேளாண் பெருங்குடி மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் வேளாண் ஆராய்ச்சி திருத்தி அமைக்கப்படும். பிரச்சினைக்கு ஏற்ற, பகுதிக்கேற்ற வகையில் வேளாண் ஆராய்ச்சி அமையும். மானாவாரி வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் விளைபொருள் பதனிடுதல், நீர் மேலாண்மை, பண்ணை இயந்திரமயமாக்குதல் போன்றவற்றை மையமாகக் கொண்டு ஆராய்ச்சி அமையும். விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் குறிப்பாக உயிரியல் தொழில் நுட்பம் தொடர்பான முன்னணிப் பகுதிகளின் ஆராய்ச்சியால் விளையும் பலன்கள், விவசாயிகளை விரைவாகச் சென்றடையும்.

* வேளாண் கல்வியை தற்போதுள்ள காலத்திற்குத் தேவையான, வேளாண்மை தொடர்புள்ள தொழில்கள் மற்றும் தொழில் முனைபங்களுக்கு ஏற்பச் சீரமைத்தல்.

[*1995 நவம்பர் 10*

* நம் தேவைக்கும் ஏற்றுமதிக்கும் ஏற்ப பழ வகைகள், காய்கறிகள், மலர்கள் மற்றும் வாசனை திரவியப் பொருட்கள் ஆகியவற்றை விற்பனைக்கு ஏற்பப் பதனிடும் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கித் தோட்டக்கலையை மேம்படுத்துதல்.

* வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர் வளர்ச்சிக்குத் தேவையான நல்ல தரமான விதைகள் மற்றும் கன்றுகள் உற்பத்தி செய்து வழங்குதல்.

* வேளாண் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கு ஏற்ற வண்ணம் மனிதசக்தி இழப்பைக் குறைக்கும் வகையில் வேளாண் கருவிகள், இயந்திரங்கள் பயன்படுத்தப்படும்.

* அரசுத் திட்டங்கள் பொதுக் கட்டமைப்புகள், மேலாண்மையில் வேளாண் பெருங்குடி மக்களின் பங்கேற்பு ஊக்குவிக்கப்படும்.

* தன்னார்வ நிறுவனங்களின் பங்கேற்பு, கிராம வேளாண்மை வளர்ச்சியில் ஈடுபடுத்தப்படும்.

உணவு எண்ணெய்த் தேவையை தன்னிறைவு செய்யும் வகையில் உற்பத்தி எண்ணெய்வித்துகள் மற்றும் அது தொடர்பான பயிர்களின் உற்பத்தித் திறன் உயர்த்தப்படும்.

மகளிரின் பங்கேற்பே அதிகமாகக் கொண்ட வேளாண்மையில் அவர்களுக்குப் புதிய தொழில் நுட்பங்கள் அளிக்கப்படும். இதுவே வேளாண்மை வளர்ச்சிக்கு வழி வகுக்கும்.

இக்கொள்கையின் நோக்கங்கள் வேளாண் வளர்ச்சி, ஆராய்ச்சி, கல்வி மற்றும் விரிவாக்கத் திட்டங்களை புதுப்பிக்கும். இப்புதிய வேளாண் கொள்கை முதலீட்டுத் திட்டங்களுக்குத் தேவையான முன்னுரிமைகளை வழங்கும். அத்துடன் வேளாண்மையில், வள ஆதாரப் பங்கீட்டில் தேவையான மாறுதல்களைச் செய்யும். வேளாண் ஆராய்ச்சி, சுற்றுப்புறச் சூழல் மேம்பாடு, அறுவடைக்குப் பின் நேர்த்தித் தொழில் நுட்பங்கள், விளைபொருள்கள், பதனிடுதல், நீர் மேலாண்மை ஆகியவற்றில் பொது முதலீடு அதிகப்படுத்தப்படும். இம்மாநிலத்தில் அமைந்துள்ள பல்வேறு உயிரியல் வேறுபாடுகளைக் கருத்தில் கொண்டு, சுற்றுப்புறச் சூழ்ல்களைப் பாதுகாக்கவும், வேளாண் வளர்ச்சியைத் தொடர்ந்து உறுதி செய்து கொள்ளவும் நீடித்த நிலையான வேளாண்மையை உயர்த்துவது அவசியம் ஆகும். தமிழ்நாடு வேளாண்

1995 நவம்பர் 10]

கொள்கை, வேளாண் வளர்ச்சியை மேம்படுத்தவும், உயர் வருமானத்தைப் பெருக்கவும், கிராமிய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், வேளாண்மையில் நிலவும் இடைவெளியை நீக்கவும், தொடர்ந்து பயனுள்ள கிராம வேலைவாய்ப்பை உருவாக்கவும் உதவும். இதன்மூலம் வேளாண் வளர்ச்சி விரைந்து முன்னேறவும், ஏழ்மையை விரட்டவும் புதிய பார்வையாக, பாதையாக, எண்ணிய பரிமாணத்தைச் சென்றடையச் செய்வது தமிழ்நாடு வேளாண் கொள்கை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS